# பழ ஈ கட்டுபடுத்தல்: மலிவு விலை பிடிப்பான்கள் & வசப்படுத்தும் சாதனங்கள் தயாரிக்கும் முறை




காலி 1 லிட்டர் பிளாஸ்டிக் தண்ணீர் பாட்டிலில் மேலிருந்து 3 அங்குலம் விட்டு ஒரு அங்குல அளவிற்கு 3 சன்னல் போன்ற வடிவினை கத்தியால் வெட்டி கொள்ளவும்..




பாட்டிலின் மூடியின் நடுவில், ஒரு ஊசியினால் சிறிய துளை செய்து கொள்ளவும்.




பத்து அங்குல நீளம் கொண்ட மெல்லிய கம்பியை (வையரை) எடுத்துக்கொண்டு அதன் நடுவில் ஒரு முடிச்சினை போட்டு மூடியின் கீழ்பகுதி வழியாக நுழைத்து மேல் பகுதியில் பாட்டிலை தொங்கவிடுவதற்கு ஏதுவாக வளைவு ஏற்படுத்தி, மறு முனையில் வசப்படுத்தும் சாதனம் மாட்டுவதற்கு ஒரு கொக்கியை செய்யவும்







அரை அங்குல அடர்த்தியுள்ள பருத்தி நூலினை (கயிறு) எடுத்து, இரண்டு அங்குல நீளத்திற்கு சிறு துண்டுகளாக கத்தரித்து அதன் முனையை மெலிதான கம்பியால் கட்டவும்




வசப்படுத்தும் சாதனம் தயாரிப்பு : 30 பாட்டில்கள் @ 4 மிலி / பாட்டில்

**மெத்தில் யுஜிநோல்** (Methyl Eugenol- ME) : 60 மிலி எதில் அல்கஹோல் : 40 மிலி மெத்தில் யுஜிநோல் மற்றும் 20 மிலி மலதியன்/ DDVP (புசிகொல்லி) (அதாவது 6:4:2 என்கிற விகிதத்தில்) கலக்கவும்.

**கியூ லூர்** (Cue lure) : 60 மிலி எதில் அல்கஹோல் : 40 மிலி கியூ லூர் மற்றும் 20 மிலி மலதியன்/ DDVP (புசிகொல்லி) (அதாவது 6:4:2 என்கிற விகிதத்தில்) கலக்கவும்.




கத்தரிக்கப்பட்ட பருத்தி நூல் துண்டுகளை ME / Cue வசப்படுத்தும் சாதன கரைசலில் 24 மணி நேரத்திற்கு ஊற வைக்கவும். வசப்படுத்தும் சாதனத்தில் ஊற வைத்த ஒவொரு நூல் துண்டுகளையும் மீண்டும் பயன்படுத்தும் வரை தனித்தனியே அலுமினியதாள்களில் சுற்றி வைக்கவும்.




உபயோகபடுத்தும் வேளையில் அலுமினியதாளின் மூன்றில் ஒரு பகுதியை அகற்றிவிட்டு வசப்படுத்தும் சாதனத்தை மூடியில் பொருத்தப்பட்டுள்ள மெல்லிய கம்பியில் கட்டிவிடவும்




பாட்டிலை வெவ்வேறு இடங்களில் பூமியிலிருந்து குறைந்தபட்சம் 3- 4 அடி உயரத்தில், நிழலான இடத்தில கட்டித் தொங்கவிடவும்

வசப்படுத்தும் சாதன கலவையை தயாரிக்கும் போது நல்ல காற்றோட்டமுள்ள அறையில் கைகளில் உறை அணிந்து கொண்டு தனி-தனி கொள்கலன்களையும், அளவிடும் ஜாடிகளையும் உபயோகபடுத்தவும். ஒரு பாட்டில் பிடிபானுகான வசப்படுத்தும் சாதனம் (ME/ Cue lure) தயாரிக்க சுமார் ருபாய் 35/- செலவாகும். பின்பக்கத்தில் அளவைகள் பற்றி பார்க்கவும்

மேலும் விவரங்களுக்கு :Asst. Director - RPM, Plant Biosecurity Division, NIPHM, Hyderabad, Telangana.
Mobile:09100207342. Email: adrpmniphm-ap@nic.in

**NATIONAL INSTITUTE OF PLANT HEALTH MANAGEMENT**
Department of Agriculture & Cooperation, Ministry of Agriculture & Farmers Welfare, Govt. of India
राष्ट्रीय वनस्पति स्वास्थ्य प्रबंधन संस्थान
कृषि एवं सहकारिता विभाग, कृषि एवं किसान कल्याण मंत्रालय, भारत सरकार
रा व स्वा प्र सं
NIPHM

## மெத்தில் ஐகேநோல் லூர்க்கு வசப்படும் பழ ஈக்கள்



மாம்பழ ஈ *பாக்ட்ரோசீர டார்சலிஸ்* | கொய்யாபழ ஈ *பாக்ட்ரோசீர க்ரெக்டா* | குழிப்பேரிபழ ஈ *பாக்ட்ரோசீர ஜூநேட* | *பாக்ட்ரோசீர கார்யியே*

# மெத்தில் யுஜிநோல் (ME lure) வசப்படுத்தும் சாதனம் பயன்பாடுகள்

பயிர்கள் : மாம்பழம், பப்பாளி, கொய்யா, எழுமிச்சை மற்றும் எல்லா பழ வகைகள்

### கண்காணிக்க வேண்டியவைகள் (For Monitoring)

- ஒரு சதுர கி. மீ. தேவையான வசப்படுத்தும் சாதனம் (lure) : 1
- காலம் : **வருடம் முழுவதும்**
- மாற்றவேண்டியது : **30 - 40 நாட்களுக்கு ஒரு முறை**
- ஒரு சதுர கி மீ பயன்படுத்த வேண்டிய வசப்படுத்தும் சாதனம் : 8 – 12/ **ஒரு வருடம்**

### பரப்பளவு கட்டுபாட்டிற்கு (For Area-wide Control)

- ஒரு ஏக்கருக்கு தேவையான வசப்படுத்தும் சாதனம்: 6 - 10
- காலம் : **காய் தோன்றியதில் இருந்து அறுவடை வரை**
- மாற்றவேண்டியது: **30 - 40 நாட்களுக்கு ஒரு முறை**
- பருவத்தில் ஒரு ஏக்கருக்கு உபயோகபடுத்த வேண்டிய வசப்படுத்தும் சாதனம் : 12-20 **அல்லது** 18-30 பயிருக்கு ஏற்ப

# கியூ லூர் (Cue lure) வசப்படுத்தும் சாதனம் பயன்பாடுகள்

பயிர்கள் : வெள்ளரி, கோவைக்காய், பரங்கி, பூசணி, பாகற்காய், புடலங்காய், பீர்கங்காய், சுரைக்காய், மூலாம் பழம், சீமை வெள்ளரி, etc. மற்றும் மாம்பழம், கொய்யா, எழுமிச்சை, சப்போட்டா etc.

### கண்காணிக்க வேண்டியவைகள் (For Monitoring)

- ஒரு சதுர கி. மீ. தேவையான வசப்படுத்தும் சாதனம் (lure) : 1
- காலம் : **வருடம் முழுவதும்**
- மாற்றவேண்டியது : **30 - 40 நாட்களுக்கு ஒரு முறை**
- ஒரு சதுர கி மீ பயன்படுத்த வேண்டிய வசப்படுத்தும் சாதனம் : 8 – 12/ **ஒரு வருடம்**

### பரப்பளவு கட்டுபாட்டிற்கு (For Area-wide Control)

- ஒரு ஏக்கருக்கு தேவையான வசப்படுத்தும் சாதனம்: 6 - 10
- காலம் : **பூவிலிருந்து அறுவடை வரை**
- மாற்றவேண்டியது: **30 - 40 நாட்களுக்கு ஒரு முறை**
- பருவத்தில் ஒரு ஏக்கருக்கு உபயோகபடுத்த வேண்டிய வசப்படுத்தும் சாதனம் : 12-20 **அல்லது** 18-30 பயிருக்கு ஏற்ப

## கியூ லூர்க்கு (Cue Lure) வசப்படும் பழ ஈக்கள்



வெள்ளரி ஈ *பாக்ட்ரோசீர குகர்பிடே* | *பாக்ட்ரோசீர தாவு* | *பாக்ட்ரோசீர நைக்ரோபிமொரலிஸ்* | *பாக்ட்ரோசீர காடேட்ட*